**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

Mcop 135/2025 c/w 372/2021

ம.சா1 சிவசத்திய மூர்த்தி

| | |
|---|---|
| Name | : சிவசத்திய மூர்த்தி |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | :1.11.2025 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த எம்.சி.ஒ.பி.135/2025 வழக்கில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

1. குற்றாலம் காவல்நிலைய குற்ற எண். 376/2020 வழக்கின் முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 1.

2. என்னுடைய காயச்சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 2

3. டி.என்.72.ஏ.ஜே.4821 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 3

4. டி.என்.72.ஏ.டபிள்யூ.7961 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 4

5. டி.என்.72.ஏ.ஜே 4821 என்ற வாகனத்தின் காப்பீடு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 5

6. குற்ற வழக்கின் பார்வைமகசர் ஆன்லைன் நகல் ம.சா.ஆ 6

7. குற்ற வழக்கின் மாதிரிவரைபடம் ஆன்லைன் நகல் ம.சா.ஆ 7

8. 1ம் எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதியறிக்கை ஆன்லைன் நகல் ம.சா.ஆ 8. மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

டி.என்.72.ஏ.ஜே.4821 என்ற டாடா இண்டிகா கார் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த காரை விபத்து சமயம் எனது நண்பர் பாஸ்கர் என்பவர் ஓட்டிசென்றார் என்றால் சரிதான். எனது அண்ணன் பெயர் ஆழ்வார் அப்பன் என்றால் சரிதான். எனக்கு விஜயன் என்ற சகோதரர் உள்ளார் என்றால் சரிதான். நானும், எனது சகோதரர்களும் சேர்ந்து ஸ்ரீ சிவா ஏஜென்சி என்ற பெயரில் வாட்டர் கேன் சப்ளை செய்து வந்தோம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை காவல்துறையினர் விசாரித்தார்கள் என்றால் சரிதான். காவல்துறை விசாரணையிலும் எனது தொழில் சம்பந்தமாக சொன்னேன். நான் விபத்தின் போது காரின் பாஸ்கர் ஓட்டும் போது இடதுபுற இருக்கையில் அமர்ந்து இருந்தேன். காரின் பின் சீட்டில் எனது சகோதரர் ஆழ்வார் அப்பன் அமர்ந்து இருந்தார். நாங்கள் சென்ற கார் குற்றாலம் முதல் பழைய குற்றாலம் செல்லும் சாலையில் வடக்கில் இருந்து தெற்குநோக்கி சென்று கொண்டிருந்தது என்றால் சரிதான். அந்த காரை ஓட்டுனர் பாஸ்கர் மெதுவாக தான் ஓட்டி சென்றார் என்றால் சரிதான். அப்போது எதிரே வந்த டி.என்.72.ஏ.டபிள்யூ.7961 என்ற டவோரா காரின் ஓட்டுனர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எங்கள் கார் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரிதான். விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என பாஸ்கர் குற்றாலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த 1ம் எதிர்மனுதாரர் மீது காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். விபத்தின் போது 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்திற்கும் காப்பீடும் , அவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றால் சரிதான். நான்

தென்காசி அரசு மருத்துவமனையில் மட்டும் தான் சிகிச்சை எடுத்தேன் என்றால் நான் தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை எடுத்து கொண்டேன். நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தில் என் காருக்கு ஏற்பட்ட சேதாரத்திற்கு நான் எனதுகாப்பீடு நிறுவனத்தில் இழப்பீடு பெற்று விட்டேன் என்றால் சரிதான். விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதால் 1, 2 எதிர்மனுதாரர்கள் தான் எனக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் என்றும், காப்பீட்டு நிறுவனத்தை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் ஹோட்டலில் மேனேஜராக இருப்பதற்கு மாதம் தோறும் ரூ.20 ஆயிரம் சம்பளம் பெற்று வருவதற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மனுவிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயம் பாஸ்கர் என்னிடம் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல. வேலை செய்தார். பாஸ்கர் என்னிடம் நிரந்தரமாக வேலை செய்து வந்தார் என காவல்துறை விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொன்னேன். பாஸ்கர் என்பவருக்கு மாதசம்பளம் கொடுப்பதற்கு நான் எந்த ஆவணமும் கொடுப்பதில்லை என்றால் சரிதான். வாராவாரம் ரொக்கமாக கொடுப்பேன். பாஸ்கர் என்னிடம் வேலை செய்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் பயணம் செய்த கார் கட்டுப்பாட்டை இழந்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனது காப்பீடு நிறுவனத்தை பொறுத்து நான் 3 ம்தரப்பினர் இல்லை என்றால்

சரியல்ல. பாலிசி மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் எந்தவிமான இழப்பீடும் காப்பீடு நிறுவனம் வழங்ககடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.

**In the court of the Additional Subordinate Judge, Tenkasi.**

Deposition of Witness

Mcop 135/2025 c/w 372/2021

ம.சா2 பாஸ்கர்

| | | |
|---|---|---|
| Name | : | பாஸ்கர் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 1.11.2025 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த எம்.சி.ஓ.பி.372/2021 வழக்கில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

1. என்னுடைய காயச்சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 9

2. என்னுடைய ஒட்டுனர் உரிமம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ10. மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து சமயம் நான் சிவசத்தியமூர்த்தி என்பவரின் டி.என்.72.ஏ.ஜே.4821 என்ற டாடா இண்டிகா காரை ஒட்டி சென்றேன் என்றால் சரிதான். அந்த காரை வடக்கில் இருந்து தெற்கு நோக்கி குற்றாலம் முதல் பழைய குற்றாலம் நோக்கி ஒட்டி சென்றேன் என்றால் சரிதான். நான் அந்த காரை மெதுவாக சாலையின் இடதுபுறம் ஒட்டி சென்றேன் என்றால் சரிதான். அப்போது 1ம்எதிர்மனுதாரர் சுபாஷ் அவர் ஒட்டி வந்த காரை அஜாக்கிரதையாக ஒட்டிவந்து வலதுபுறமாக மோதிவிட்டார் என்றால் சரிதான். விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் தான் காரணம் என்றால் சரிதான். நான் 1ம் எதிர்மனுதாரர் மீது

புகார் கொடுத்து அதன்பேரில் முதல் தகவல் அறிக்கை , இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சிவசத்திய மூர்த்தி எனது நண்பர் என்றால் சரிதான். விபத்து சமயம் நான் சிவசத்திய மூர்த்தியிடம் வேலை பார்க்கவில்லை என்றால் அவரிடம் தான் வேலை பார்த்தேன். நான் சிவசத்திய மூர்த்தியிடம் ஒட்டுனராக பணிபுரிந்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கும் போது Energy Stick India Limited company –ல் தென்காசி மாவட்ட விற்பனையாளராக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி கம்பபெனியில் வேலை செய்து வருவதாக தான் முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் நான் ஒரு மாதம் மட்டுமே வேலை செய்தேன். அந்த கம்பெனியை மூடிவிட்டார்கள். மேற்படி கம்பெனியில் வேலை செய்து மாதம் ரூ.12 ஆயிரம் சம்பளம் பெற்றேன் என்பதை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்கள் சிராய்ப்பு காயங்கள் என்றால் சரிதான். எனக்கு எலும்பு முறிவு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். தற்போது எங்கு வேலை செய்து வருகிறேன் என்றால் பூஜை பன்னீர் விற்பனை செய்யும் வேலை செய்து வருகிறேன். நான் ஒட்டி சென்ற காரை பொறுத்து 4ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்திற்கு எதிராக நான் 3ம் தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல. விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் நடைபெற்றுள்ளதால் 1,2 எதிர்மனுதாரர்கள் மட்டும் தான் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் என்றும் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க

கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 4 ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.